# பத்திரிக்கை செய்தி

நாமக்கல் மாவட்ட சமூகநல அலுவலகத்தின் வாயிலாக விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளி பெண்கள் ஆகியோர்களுக்கு தையல் இயந்திரம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்:-**

---

1. வருமானச் சான்று ரூ.72,000/-க்குள் (வட்டாட்சியரிடம் பெற வேண்டும்).
2. இருப்பிடச் சான்று (வட்டாட்சியரிடம் பெற வேண்டும்).
3. தையல் பயிற்சி சான்று (பதிவு செய்யப்பட்ட தையல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது) (6 மாத கால பயிற்சி).
4. வயது சான்று (20 முதல் 40 வயது வரை) அல்லது கல்விச் சான்று அல்லது பிறப்புச் சான்று.
5. சாதிச் சான்று.
6. கடவுச்சீட்டு (Passport Size Photo) அளவு மனுதாரரின் கலர் புகைப்படம் -2
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளி பெண் சான்று நகல்.
8. ஆதார் அடையாள அட்டை.

மேற்காணும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை நாமக்கல் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 20.07.2019-க்குள் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:**

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
அறை எண். 19, இரண்டாம் தளம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
நாமக்கல் மாவட்டம்.

**ஓம்/-மு.ஆசியா மரியம் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**